**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 225/2018**

2023 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 07–ம் நாள் திங்கட்கிழமை என்பவரது சாட்சியின் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்திய சாட்சியசட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு T. சோழவேந்தன் B.A.,B.L., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 07.08.2023 | தந்தை பெயர்: | லேட்.கோவிந்தசாமி |
| பெயர்: | ஜெயபாலன் (PW-1 Chief ) | தாலுக்கா: | சீர்காழி |
| கிராமம்: | சீர்காழி | சமயம்: | |
| சாதி: | | வயது : | 74 /2023 |
| தொழில்: | | | |

**<u>முதல் விசாரணை : 07.08.2023.</u>**

நான் இவ்வழக்கின் வாதியாவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். முதன்மை சாட்சியத்தை சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். வழக்கிற்கு ஆதரவாக கீழ்காணும் ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

14.07.1971 தேதியிட்ட தாவா சொத்தை பொறுத்து எனது பெயரில் ஏற்பட்ட கிரய சாசனத்தின் அசலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.1. ஆக குறியீடு செய்யப்படுகிறது**. 20.10.2003 தேதியிட்ட எனது பெயரில் சீர்காழி நகராட்சி ஆணையர் வழங்கிய கட்டிட அனுமதி செயல்முறை உத்தரவின் அசலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.2. ஆக குறியீடு செய்யப்படுகிறது**. 20.10.2003 தேதியிட்ட சீர்காழி நகராட்சி ஆணையரால் அங்கீகரிப்பட்ட கட்டிட அனுமதி வரைபடத்தை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.3. ஆக குறியீடு**

**செய்யப்படுகிறது**. 05.06.2017 தேதியிட்ட சட்ட அறிவிப்பின் அலுவலக நகலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.4. ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 08.06.2018–ல் முதல் பிரதிவாதியும், 3–ம் பிரதிவாதியும் சட்ட அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டையின் அசலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.5. வரிசை ஆக குறியீடு செய்யப்படுகிறது. (எண்ணிக்கை – 2)**. 22.06.2018 தேதியிட்ட முதல் பிரதிவாதி அனுப்பிய கேவியட் மனுவின் சார்வு நகலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.6. ஆக குறியீடு செய்யப்படுகிறது**. 16.03.1998 முதல் 10.03.2018 வரையுள்ள தாவா சொத்தில் உள்ள வீட்டிற்கு வீட்டு வரி செலுத்தியதற்கான ரசீதுகளை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.7 வரிசை ஆக குறியீடு செய்யப்படுகிறது. (எண்ணிக்கை – 6)**. 23.01.2018 முதல் 15.05.2018 வரை தாவா சொத்தில் உள்ள வீட்டிற்கு மின் கட்டணம் செலுத்தியதற்கான மின் கட்டண ரசீதுளை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.8 வரிசை ஆக குறியீடு செய்யப்படுகிறது. (எண்ணிக்கை – 3).** நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை பார்வையிட்ட தாக்கல் செய்த அறிக்கை மற்றும் வரைபடத்தை தாக்கல் செய்கிறேன். அது முறையே **நீ.ம.சா.ஆ. 1 மற்றும் நீ.ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.